LIBRARY
13 OCT 2005
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## FIRST YEAR EXAMINATION IN BBA/BCOM 1998/99 (EXTERNAL)

## MARCH - 2005

## BBA / BCOM – 105 - PRINCIPLES OF MANAGEMENT (Repeat)

முதல் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக. **Time : 03 Hours**

---

01.

தூண்டுதல் என்பது ஒரு உள்ளார்ந்த செயல்முறையாகும். இது நிறுவனத்தின் இலக்கினை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் மனித நடத்தையினை மாற்றி அமைக்கின்றது. ஒரு நிறுவனத்தின் கீழ்மட்ட ஊழியர்களுக்கான தூண்டுதலின் முக்கியத்துவத்தினை Ed Beauvaisன் புது போக்குவரத்துச் சேவையான Western Pacific பிரதிபலிக்கின்றது.

குறைந்த செலவும், குறைந்த விமானக் கட்டணமும் நிச்சயமாக இலாபகரமான வியாபாரத்திற்கு இட்டுச் செல்லும், Beauvais தனது முன்னய முயற்சியான America west Airlinesன் தோல்விக்கான காரணிகளைக் கண்டறிவதற்கு ஏறத்தாழ ஒரு வருடத்தினைச் செலவு செய்தார். மீண்டும் தனது முயற்சியில் ஈடுபடுவதற்காக அவர் Oklahamo billionaire Edward Gaylord அத்துடன் Oil heiress Margaret Hunt Hill ஆகியவற்றை நாடினார். Beauvaisன் தனிப்பட்ட தூண்டுதலின் காரணமாக அந் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் அவருக்கு தலா $ 5.5 million கொடுத்தது. அத்துடன் ஏனைய முதலீட்டாளர்களிடமிருந்து $ 17 million உம், மக்களின் பங்களிப்பினூடாக $ 48 million உம் பெற்றுக் கொண்டார். Western Pacific Airlines உடன் Beauvais தனது வியாபாரத்தினை மீண்டும் ஆரம்பித்தார்.

Western Pacific ஆனது குறைந்த செலவுடனான ஒரு விமானச் சேவையாகும். இது சில வழிகளில் America West உடன் ஒத்திருந்தது. Beauvais இரு வகையான தந்திரோபாயங்களைத் தனது புதிய முயற்சியில் பிரயோகிக்கத் தீர்மானித்தார். ஒன்று தனது முன்னைய நிறுவனமான America Westன் அனுபவத்தின் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றிகரமான தந்திரோபாயங்களையும், இரண்டாவது அதில் அவரின் பின்னடைவுகளைச் சீர்செய்வதற்கான புதிய தந்திரோபாயங்களையும் உருவாக்கினார்.

குறைந்த செலவு விமானப் போக்குவரத்துச் சேவையின் கண்டுபிடிப்பாளர்களான South West Airlines உடன் நேருக்கு நேர் போட்டியிடுவதனை Beauvais தற்போது மீண்டும் செய்யக்கூடாது. 737s ஊடான பயணத்தினை வழங்குவதனூடாக Colorado Springs ஐ வெளியேற்றலாம் என்பதில் Beauvais நம்பிக்கை கொண்டிருக்கிறார். இத் தந்திரோபாயமானது Denver International Airport boondoggled; $ 5 billion அவர் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கியது. Aviation systems Research Corporation இன் தலைவரான Michales Boyd, Beauvais ஐப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார். "Beauvais is right on top of a gold mine".

Beauvais தனது நிறுவனத்தினை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்ல வாடிக்கையாளர் - சாதனம் (Customer – equipment) என்ற அடிப்படையில் தந்திரோபாயத்தினைப் பிரயோகித்தார். (Western Pacific தனது செயற்பாடுகளை ஆரம்பித்து 8 இரவுகளுக்கு பின்பு Beauvaisன் (இருப்பில் காணப்பட்ட ஆரம்ப முதலீடு $ 100,000 பல மில்லியன் டொலர் பெறுமதியினை கொண்டிருந்தது). இருந்தபோதிலும் Beauvais தனது தொழிலாளர்களை தூண்டுவதற்கான தந்திரோபாயத்தினை மீண்டும் தனது புது முயற்சியான Western Pacificல்லும் பிரயோகிப்பதினை உறுதிப்படுத்திக் கொண்டார். அவர் தொழிலாளர்கட்கான மரியாதை, தொழிலாளர்களின் ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொண்டார். அந் நிறுவனத்தில் தொழிலாளர்கள் பங்குகளைக் கழிவு விலையில் கொள்வனவு செய்வதற்கும் அதன் மூலம் பங்குதாரர் ஆவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது. நிறுவனத்தில் பங்குகளைக் கொள்வனவு செய்த தொழிலாளர்கள், நிறுவனத்தின் பணத்தினைச் சிக்கனப்படுத்துவதற்கும் / சேமிப்பதற்கும், செலவைக் குறைப்பதற்கும் சேவையினை உயர்த்துவதற்கும் தூண்டப்பட்டனர். உரிமையாளர் - விமான ஓட்டிகள் (Owner – Pilot) தமது விமானத்தின் மீதான பொறுப்பினை எடுத்துக் கொண்டனர்.

இங்கு தொழிலாளர்கள் தனி மனிதர்களாகக் கருதப்பட்டதுடன் தமது சொந்தக் கருத்துக்களை வளர்த்துக் கொள்ள உற்சாகப்படுத்தப்பட்டனர். அதே மாதிரி முகாமையாளர்கள் வழி நடத்துவதற்கும், உற்சாகப்படுத்துவதற்கும், தொழிலாளர்களின் கருத்துக்களை ஒழுங்கமைப்பதற்கும் அறிவுறுத்தப்படுகின்றனர். தொழிலாளர்கள் எவ்வித பயமுமின்றி நிறுவனத்தின் எல்லாவகையான நிலையில் உள்ளவர்களுடனும் தமது தொடர்பாடலை மேற்கொள்ள உற்சாகப்படுத்தப்படுகின்றனர். இவ்வகையான திறந்த தொடர்பாடல் முறையானது தொழிலாளர்களை எவ்வித பயமுமின்றி உயர்மட்டத்திலுள்ளவர்களுடன் உரையாடத் தூண்டுவதுடன் நிறுவனத்தின் நன்மை கருதி அவர்கள் மிக்க ஆர்வத்துடன் ஒன்றாக உழைப்பதற்கும் தூண்டுகின்றது.

1 3 OCT 2003
Eastern University, Sri

ஒரு நட்புறவுடன் கூடியதும், (Friendly), ஆக்க பூர்வமாதுமான (Creative) வேலைச் சூழலில், தொழிலாளர்கள் தம்மைத் தாமே முகாமை செய்யக் கூடிய நிலையை அனுமதிப்பதன் மூலம் நிறுவனத்தில் தூண்டுதலையும், உற்சாகமான தொழிலாளர் படையையும் Western Pacific நிர்வகிக்கின்றது. Beauvais இன் விமானப் பணியாளர்கள் விமானம் எவ்விடங்களால் போய் கொண்டிருக்கின்றது என்பதனை பயணிகட்கு தெரிவிப்பதுடன், பயணிகளுடன் நகைச்சுவையாகவும் இருக்கின்றனர், அத்துடன் TV மூலம் Cartoons களும் ஒளிபரப்பப்படுகின்றது.

Beauvais இனால் கடைப்பிடிக்கப்படும் தத்துவம் யாதெனில் "மக்கள் எம்முடன் பறக்கும் போது அவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்". இவ் அணுகுமுறையானது அந்நிறுவனத்தின் தொழிலாளர்களையும் வாடிக்கையாளர்களையும் தொடர்ந்து அதனுடன் நிலைத்திருக்கச் செய்கின்றது.

Western Pacificஇன் தொழிலாளர் நன்மை நிகழ்ச்சித்திட்டம் (Employee benefic program) ஆனது தொழிலாளர் உள்ளீட்டை ஊக்குவிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது மக்கள் சார்பானதும், தொழிலாளர் நட்புறவானதுமான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது உதாரணமாக மகப்பேற்று விடுமுறை, ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள், என்பன நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன. வேலைப்பகிர்வும், வீட்டில் வேலை செய்தல் (Work – at – home) தொடர்பான திட்டங்களும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. அத்துடன் விமானப் பணியாளர்கட்கு முக்கிய நிகழ்ச்சிகளின்போது கழிவுவிலையில் விமானச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் இன்னுமொரு திட்டம் யாதெனில், ஊழியர்கள் பெரிய சீட்டுக்களை (big – tickets) கொள்வனவு செய்வதற்காகவோ, விடுமுறைகளை கழிப்பதற்காகவோ அல்லது முதலீடு செய்வதற்காகவோ தமது சம்பளத்தினை முன்னதாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வகையான திட்டங்கள் யாவும் America West Airlines இல் காணப்படுகின்றது. Beauvaisஇன் நம்பிக்கை யாதெனில், இவ்வாறான திட்டங்களானது தொழிலாளர்கட்கு தூண்டுதலை ஏற்படுவதற்கும், வியாபாரத்தினது வெற்றிக்கும் முக்கியமானது என்பதாகும். "மக்கள் இங்கு வேலை செய்வதில் மகிழ்ச்சி அடைவார்கள் எனின், அவர்களால் இயலுமான வரையிலும் நுகர்வோர் சேவையினை வழங்கமுடியும்" – என Human Relation Glenn Goldberg ன் பணிப்பாளர் கூறுகின்றார்.

வினாக்கள்

1) i) Western Pacific இல் எவ்வாறு தூண்டுதலின் செய்முறைக் கோட்பாடுகள் (Process Theory of Motivation) நடைமுறைப்படுத்தப்படுகின்றன?

ii) Beauvais இன் தொழிலாளர் உறவுமுறையில் சொல்லப்பட்ட தேவைகளை அடையாளம் காண்பதற்கு Maslow வின் படிமுறைக் கோட்பாட்டைப் பிரயோகிக்குக.

iii) Beauvais பின்வருவனவற்றில் எவ்வகையான முகாமையாளர்களை கருத்தில் கொண்டார் கோட்பாடு X, கோட்பாடு Y, அல்லது கோட்பாடு Z, ஏன்?

iv) கம்பனியின் வெற்றிக்கு தனது முகாமைத்துவ முறையே முக்கியம் எனக் Beauvais கருதியமைக்கான காரணம் என்னவெனக் கருதுகின்றீர்?

2) i) முகாமைத்துவச் செய்முறையின் அடிப்படைப் பண்புகளை சுருக்கமாக விளக்குக.

ii) ஒரு நிறுவனத்தின் தரம் (Level), பரப்பு (Area) ஆகியவற்றில் காணப்படும் வேறுபட்ட முகாமையாளர்களை அடையாளம் காண்க.

iii) முகாமையாளர்களின் திறன்களை அடையாளம் கண்டு, உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

3) i) நிறுவனக் கலாச்சாரத்தை வரைவிலக்கணப்படுத்தி அதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

ii) ஒரு நிறுவனத்தின் அகச் சூழலின் பகுதிகளை சுருக்கமாக விளக்குக.

iii) நிறுவனத்தின் சமூகம் பொறுப்புகளைச் சார்பாகவும், எதிராகவும் வாதிக்குக.

4) i) ஒரு நிறுவனத்திற்கு காணப்படும் தந்திரோபாயப் பதிலீடுகளை இனம்கண்டு சுருக்கமாக விளக்குக.

ii) Optional, Tactical திட்டமிடலை விளக்குக, அவற்றுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

5) i) ஒரு நிறுவனத்தில் எவ்வாறான நிபந்தனைகளின் கீழ் தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றது என இனம்கண்டு, ஆராய்க.

ii) பகுத்தறிவான தீர்மானம் எடுத்தலில் கடைப்பிடிக்கப்படும் படிமுறைகளை சுருக்கமாக விளக்கி, அவற்றில் கடைப்பிடிப்பதற்கு மிகவும் கடினமான படிமுறை எதுவெனக் கருதுகிறீர்?, ஏன்?

6) i) நிறுவனத்தின் வடிவமைப்பில் தாக்கம் செலுத்தும் அடிப்படைச் சூழ்நிலைக் காரணிகள் எவை?

ii) திணைக்களமயமாக்கல் என்றால் என்ன? இது எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது?

iii) நிறுவன மாற்றம் என்பதனால் கருதப்படுவது யாது?

7) i) Maslow வின் படிமுறைக் கோட்பாட்டுக்கும், இரு காரணிக் கோட்பாட்டுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமை என்ன?

ii) X வகையான மனிதர்களை, Y வகையான மனிதர்கள் ஆக்குவதற்கு தூண்டுதலின் தந்திரோபாயங்களை எவ்வாறு பயன்படுத்துவீர்.

8) i) ஐந்து அடிப்படைச் சக்திகளும் (Powers) எவை?

ii) தொடர்பாடலில் காணப்படும் தடைகள் எவை?

iii) கட்டுப்பாட்டுப் படிமுறையானது முகாமைத்துவத்தின் ஏனைய தொழிற்பாடுகளுடன் எவ்வாறு தொடர்புபடுகிறது?

LIBRARY